UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

ELTERNINFORMATION

# மருத்துவ மனையில் தங்குதல்



Das Spital der
Eleonorenstiftung

# உள்ளடக்கங்கள்

நீங்கள் எப்படி உங்கள் பிள்ளையை மருத்துவமனையில் தங்கத் தயார்ப்படுத்தலாம் 2
மருத்துவமனையில் இருக்கும் போது வரும் முக்கிய கேள்விகள் 4
உங்கள் பிள்ளைக்கு வைத்தியமும் பராமரிப்பும் செய்வோம் 7
சிறுவாமருத்துவமனையில் தொழிற்கல்வியும் ஆய்வும் 10
நாங்கள் பெற்றோர்க்கு ஆலோசனை கொடுப்போம் 12
பெற்றோர்க்கு நாங்கள் செய்யும் சேவை 14

நபர்களையும் தொழில் தராதரத்தையும் நாம் இங்கே குறிப்பிடும் போது இருபாலினத்தவரையும் அது சேரும்.

பெற்றோர்க்கான அறிவித்தல்கள், தை 2018ல் சுலபமான பாசையில் எழுதப்பட்ட புதியபதிவு ழூ.

சிறுவர் மருத்துவமனை சூறிச்சின் ஓர் சிற்றேடு

---

ழூசுலபமான பாசையின் தரம் என்பது, திறமான முறையில் விளங்கிக் கொள்வதே. இதை இலகுவான முறையில் விளங்க வைக்க முடியும்(டுநனநசபநசடிநச 2015: இலகுவானபாசையில் உள்ளடக்கத்தை நன்றாக விளங்க வைப்பதேஇ ளு.33)




# இதயபூர்வமாக வருக என சூறிச் சிறுவர் மருத்துவ மனை வரவேற்கின்றது!

சிறுவர் மரத்துவ மனையில் சுகயீனமான மற்றும் விபத்து நடந்த எல்லா வயதிலுள்ள பிள்ளைகளும் பராமரிக்கப்படுவர். வைத்தியத் துக்கும் பராமரிப்புக்கும் அவ்வேலை செய்பவர்களே பொறுப்பாகும், இவர்கள் விசேடமாக பிள்ளைகளின் மற்றும் அவர்களின் பெற்றோர்களின் தேவைகளைத் திருப்பிப் படுத்தவென தொழில் கற்றுக்கொண்டவர்களாவர். ஓர் பிள்ளையும் அதன் குடும்பமுமே எமதுமையத்தில் இருக்கின்றனர். நோயாளியின் நலமும் பெற்றோரின் திருப்தியும் எமக்கு மிக முக்கியம்.
பிள்ளைகளுக்கும் பெற்றோர்க்கும் வைத்தியங்கள் மற்றும் பராமரிப்புப் பற்றியும் விளக்கம் கொடுக்கப்படும். சத்திரசிகிச்சசை யாவும், பெற்றோர் மற்றும்.˙. அல்லது தீர்மானிக்கக்கூடிய பிள்ளையும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே செய்யப்படும்.
உங்களுக்குக் கேள்விகள் உண்டா? உங்களுக்குப் பொறுப்பான பராமரிப்புத்த்தாதிகளிடம் அல்லது பொறுப்பான வைத்தியரிடம் கேட்கவும்.
உங்கள் பிள்ளைக்கு எல்லாம் சுகமாகவரவேண்டும் என நாங்கள் வாழ்த்துகிறோம் அத்துடன் மருத்துவ மனையில் தங்கி நிற்கும் காலம் நன்றாகவும் அமைய வேண்டும் என விரும்புகிறோம்.

# நீங்கள் எப்படி உங்கள் பிள்ளையை மருத்துவமனையில் தங்கத்தயார்ப்படுத்தலாம்

சிறுபிள்ளைகளுக்கு பொம்மைகளும், கஸ்பால்நாடகப் பொம்மையும் அல்லது வைத்தியரின்கைப்பெட்டியும் நன்றாக உதவும், அதைவைத்து அவர்கள் «வைத்தியசாலை» விளையாடலாம். படங்களைக் கொண்ட புத்தகங்களும் திரைப்படங்களும் உள்ளனஇ இவையின் தலையங்கம் வைத்தியசாலையைப் பற்றியதாகும். எப்படியான புத்தகங்கள் வேண்டுவதென அறிய எமது இணையத்தளத்தில் பார்க்கவும்: www.kispi.uzh.ch/spitalaufenthalt
எம்மிடம் கேளுங்கள் நாங்கள் உங்களுக்கு ஆலோசனை தருவோம்.

நீங்கள் உங்கள் பிள்ளையை மருத்துவமனையில் தங்கத் தயார்ப்படுத்த குடும்பத்தினர்க்காகச் செய்யப்படும் «ஸ்பிற்றால் சுத்திக்காட்டல்» என்ற விடயத்தில் சேரலாம். இதற்கான விபரங்களை பின்வரும் இணையத்தளத்தில் காணலாம்: www.kispi.uzh.ch/spitalvorbereitung



## நீங்கள் உங்கள் பிள்ளைக்கு வீட்டில் இருந்து சூட்கேசில் எடுத்துவரக்கூடியவை.

எல்ல நோயாளிகளும்

- வைத்தியம்பற்றியபத்திரங்கள் அ-து தடுப்பூசி அட்டை, சுகாதார கொப்பி, இரத்தச்சேர்மதி அட்டை ,காப்புறுதி ஆதாரம், அவசரதேவை அடையாள அட்டை
- பாவிக்கும் மருந்துகள் மற்றும் அருந்து அட்டவணை
- தனிப்பட்டஆசைப்பொருள் (உ-ம): பிள்ளை நல்லாக விரும்பும் பொம்மை

பாலகுடிக்குழந்தை

- மர்த்துவமனையில் முதல் நாளுக்காக ஒன்று அல்லது மேற்றாட்ட பால்மா பைகள்
- திறக்கப்படாத ஒரு புதிய பால்மா பை
- பிள்ளை தூங்குவதற்கான சூப்பி, இசைப்பெட்டி, பஞ்சுபொம்மைகள் போன்றவை
- முடிந்தால் ஒரு தூங்கும் பையும் குழந்தை காவியும்

குழந்தையும் இளையோரும

- இசைவான உடைகள்:
- வீட்டுக்காலணி, பயிற்சிக்காலணிஈ உள்ளாடைகள், காலுறைகள், பயிற்சிக்கான பிஜாமா மற்றும் நீளக்கை கொண்ட மேலாடை
- உடல் தோல் பராமரிப்பிற்கான தயாரிப்புகள்
- பொழுதுபோக்கிற்கு வேண்டியவை உம்- காதில் கேட்கும் இசைக்கரு வியும், அதற்கான மீள்வலு கரு வியும், மடிக்கணனி, புத்தகங்கள், ர்திர்வினாப் புத்தகங்கள், விளையாட்டுகள்.



# மருத்துவமனையில் இருக்கும் போது வரும் முக்கிய கேள்விகள்

## உங்கள் பிள்ளைக்கு எந்த அறை கொடுக்கப்படும்?

பராமரிப்புக் கட்டிலுக்கு வரும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அவர்களின் வயதுக்கும் நோயக்கும் தக்க மாதிரி விசேடமான அறைவழங்கப்படும்.

பிள்ளைகள் அறையில் பல கட்டிலுடன் தங்குவர்.( 2 இருந்து 4 வரை) அறையிலுள்ள மற்றப் பிள்ளைகளும் உங்கள்பிள்ளையின் வயதாக இருக்கும். வைத்தியகாரணத்தால் அல்லது வேறு காரணத்தால் இது எல்லா வேளையிலும் மேற்கூறியது போல் நடக்காமலும் இருக்கலாம்.

## உங்கள் பிள்ளைக்கு சிறுவர் மருத்துவமனையில் என்ன தரப்படும்?

- வயதுக்கஏற்ப: பியாமா மற்றும் உடல்பராமரிப்புக்குத் தேவையான பொருட்கள்
- பால்குடிகுழந்தைகளுக்கு: பம்பாஸ், சூப்பி, ஈரமானதுண்டுகள்
- பொழுதுபோக்குக்குத் தேவையானவை (புத்தகங்கள், கலர்பென்சில்கள் போன்றவை)
- சாப்பாடு மற்றும் குடிவகை

  உங்கள் பிள்ளையிடம் சாப்பாடு குடிவகை பற்றி நேரேயே கேட்டுக் கொள்கிறோம்.

  எம்மிடம் டியேற் உணவுகள் பலதரப்பட்ட நோய்களுக்கு உண்டு. அத்துடன் பால்குடிக்குழந்தைகளுக்கு பல விதமான பால்மா உண்டு.

  மருத்துவமனையில் இல்லாத விசேடபொருட்கள் உங்களிடம் உண்டா? எம்மிடம் முதலே கேளுங்கள். நீங்கள் கொடுக்கும் உங்களது உணவை முதலில் கொண்டுவரலாம். தயவுசெய்து திறக்காமல் பூட்டியிருக்கும் பொருட்களைக் கொண்டவரவும்.

  பிள்ளைக்குத் தாய்ப்பால் கொடுக்கிங்களா? உங்கள் தாய்ப் பாலை சுரந்தெடுத்து பாதுகாப்பதற்கான வசதிகளும் அதற்கான தனி அறையும் எம்மிடம் உண்டு.

## பெற்றோர் மருத்துவமனையில் துயில முடியுமா?

தாய் அல்லது தந்தை தன் பிள்ளை அருகில் மேலதிக கட்டிலில் தூ ங்கலாம். எம்மிடம் மிக குறுகிய இடங்கள் இருப்பதால் ஒருவர் மாத்திரமே இங்கு தூங்கலாம். உங்களுகான துவாய்கள் வழங்கப்படும். இரவு தங்குபவர்க்கு காலை உணவும் வழங்கப்படும். பல விடுதிகளில் குடிநீர் வசதிகளும் உண்டு. பெற்றோர் தங்கமுடியாத சில விடுதிகளும் உண்டு.

இத்தருணங்களில் மருத்துவதாதியருடன் தொடர்பு கொண்டால் இல்லத்தின் அருகில் பெற்றோர் தங்கும் அறை ஒழுங்கு செய்யப்படும். இதுபற்றிய மேலதிக தகவல்களை கீழே உள்ள இணையத் தளத்தில் www.kispi.uzh.ch/elternunterkunft காணலாம்



## பார்வையாளர் நேரங்கள் எப்படி?

பெற்றோர் சகோதரங்கள் எந்நேரமும் பார்வையிடலாம். மற்றையவர்கள் 14.00 முதல் 20.00 மணி வரை அனுமதிக்கப்படுவர்.
குழந்தைகளை அழைத்துவரும் பார்வையாளர்கள் பின்வரும் விடையத்தை கவனிக்கவும். பிள்ளைகளை பராமரிக்கும் மற்றுமொரு சேவை வசதி உண்டு ( -பெற்றோருக்கான சேவை- பந்தியில் இதுபற்றி காணலாம்) பார்வையாளர்கள் தடிமன் போன்ற தொற்றுநோய்கள் இன்றி வரவேண்டும் என்பதால் அங்குள்ள தாதியருடன் கதையுங்கள். நோயுற்ற குழந்தைகள் காரணமாக பார்வைநேரம் கட்டுப்படுத்தப் படலாம். இடநெருக்கம் காரணமாக உடன்வரும் பார்வையாளரின் தொகையை தயவுசெய்து குறைத்துக் கொள்ளவும்.

## மருத்துவமனை விட்டு வெளியேறும் நிலை எப்படி இடம்பெறும்?

மருத்துவமனை விட்டு வெளியேறுவது பற்றி உங்களோடும், பிள்ளையோடும் கலந்து தயார் செய்வோம். நீங்கள் வீடுசெல்லும் முன்னதாக மருத்துவரும் தாதியரும் இணைந்து உங்களுடனும் பிள்ளையுடனும் ஒரு உரையாடல் இடம்பெறும். விடுவிப்பின் பின்னால் அவசியமானவை (உ.ம்:- மேலதிக பயிற்சி) பற்றி திட்டமிடப்படும். இதன்மூலம் பிள்ளை மருத்துவமனை நாட்களின் பின் தன் உடல்நிலைக்கு அவசியமான அனைத்தையும் அறிந்து கொள்வார். மருத்துவமனை விட்டு வெளியேறுதல் காலை 10.00 க்குள் நிகழும்படி ஒழுங்கு செய்யப்படும்.



# நாங்கள் உங்கள் பிள்ளையை சீர்செய்கிறோம், பராமரிக்கிறோம்

## குழு

உங்கள் பிள்ளை பலதரப்பட்டதொழில்துறையினராலும், நிபுணர்களாலும் கையாளப் படுகிறார். அதனால் சம்பந்தப்பட்ட தவணைகளை முறைப்படி ஒழுங்கு செய்ய முயற்சிக்கிறோம். சிலசமயம் இதற்கான காத்திருப்புநேரம் நீண்டதாக இருக்கலாம். நாங்கள் இதனை குறுகிய நாட்களுக்குள் பெற முயற்சிப்பதோடு உங்களுக்கும் அறிவிப்போம். அவருக்கான சகல அலுவல்களும் எமது குழுவினால் அவரது சிகிச்சைப் பதிவேட்டில் பதியப்படும். இதன்மூலம் சகலமும் எப்போதும் அறியக்கூடியதாக இருக்கும்.

## பராமரிப்பு

24 மணி நேரமும் பிரிவு பிரிவாக பட்டதாரித் தகுதிபெற்ற மருத்துவத் தாதிகள் தொழில் செய்வார்கள். ஒவ்வொரு பிரிவு மாற்றத்தின்போதும் ஒவ்வொரு பிள்ளைகள் பற்றிய தகவலும் பரிமாறப்படும். இதன்மூலம் சிறந்த தரமான பராமரிப்பிற்கு உத்தரவாதம் கிடைக்கிறது. ஒரு குறிப்பிட்ட தாதியானவர் உங்களுக்கு தொடர்பாளராக இருப்பார். (சகல பராமரிப்புவிடயத்தில்)
உங்கள் தொழில்பாடுகள் போன்ற அனைத்தையும் அவருடன் நீங்கள் பேசலாம். உங்கள் பிள்ளையின் பராமரிப்பு சம்பந்தமான சகலத்திற்கும் அவரே பொறுப்பானவராக இருப்பார். இவருடனான உரையாடலின் மூலம் உங்கள் பிள்ளையின் தேவைகள், பழக்கவழக்கங்களை அவர்களும் அறிந்து கொள்வார்கள். பராமரிப்புத் திட்டங்கள் பற்றியும், அதன்மூலம் வரக்கூடிய நன்மைகள் பற்றியும் சகல அறிவித்தல்களும் அந்நபர் உங்களுக்கு வழங்குவார். இவை உங்களுக்கு அவசியம் என்றால் நீங்கள் முன்கூட்டியே அந்நபருடன் கதைத்து ஒழுங்கு செய்து கொள்ளலாம். உங்களது ஒத்துழைப்பு பராமரிப்புக் குழுவிற்கு மிக முக்கியம்.

## மருத்துவர்கள்

உங்கள் பிள்ளை சமபந்தமான செயற்பாடுகளிற்கு ஒரு மருத்துவர் இருப்பார். நோய் அறிதல் பற்றியும் அது தணிக்கும் செயற்பாடுகள் பற்றியும் உங்களுக்கு அறியத்தருவார். உங்கள் வினாக்களுக்கும் அவர் விடையளிப்பார். சிலசமயங்களில் அவர் மேலதிக ஆலோசனைகளை மருத்துவ நிபுணர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார். தினமும் ஒன்று அல்லது இரண்டுமுறை நோயாளர் பார்வையிடப்படுவார். அதன்பின் உங்கள் பிள்ளைக்கு எவ்வகை சோதனைகள் அல்லது சிகிச்சைகள் அவசியம் என்பது பற்றி பேசப்படும். சத்திரசிகிச்சை அவசியமெனில் அறுவை, மற்றும் மயக்கமருந்து நிபுணர்களுடன் உரையாடல் இடம்பெறும். இதுபற்றிய உங்கள் கேள்விகளை நீங்கள் தாராளமாக முன்வைக்கலாம்.

## தொடர் பயிற்சிகள்

மருத்துவர் உங்கள் பிள்ளைக்கு ஒரு தொடர் பயிற்சியை முன்மொழிந்திருக்கிறாரா?
பின்வரும் தொடர் பயிற்சிகளை மருத்துவமனை தரும்

- தேகாப்பியாசம்
- தொழில் சிகிச்சை
- உளவியல் இயக்கம்
- பேச்சுப் பயிற்சி
- உணவுகள் பற்றிய ஆலோசனை
- கலைவெளிப்பாட்டுப் பயிற்சி

## பாடசாலையும் பாலர் வகுப்பும்

திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை மருத்துவமனைக் கல்லூரிக்குழு உங்கள் பிள்ளைகளை பராமரிக்கும்.
உங்கள் பிள்ளை பாடசாலை மற்றும் வீட்டுப்பாட வகுப்பகளில் பங்கு கொள்ளலாம். இவ்வசதி மருத்துவமனையில் தங்கியிருக்கும் காலம் மற்றும் வயது என்பவற்றில் தங்கியுள்ளது.
மருத்துவமனைக்கல்லூரியில் ஒரு பாலர் வகுப்பும் உள்ளது. உங்கள் பிள்ளை கட்டிலைவிட்டு இறங்கத் தடை இருப்பின் ஆசிரியர் பிள்ளையின் அறைக்கு வருவார்.



# சிறுவர் மருத்துவ மனையில் கல்வியும் ஆய்வும்

## கல்வி

சிறுவர் மருத்துவ மனையானது சூரிச் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படும் போதனா பல்கலைக்கழக மருத்துவ மனையாகும். இதனால் கல்விக்காக நிபுணத்துவம் பெற (மருத்துவர்கள், தாதியர்கள், தொடர்பயிற்சியாளர்கள்) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்காக மேற்படிப்புகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்படியான உதவியாளர்-களை சிலசமயம் நீங்கள் மருத்துவமனை அறைகளில் சந்திக்கலாம். இவர்கள் விரைவில் தங்கள் பட்டப்படிப்பை முடிக்கவிருக்கும் மருத்துவ மாணவர்களாவர். இவர்கள் சிறுவர் மருத்துவ மனையில் தமது தொழில்முறைப் பயிற்சியை தொடர்பவர்களாவர். இந்நாட்களில் இவர்கள் மருத்துவமனையில் மருத்துவர் பதவியல் பங்கெடுப்பர்.

சூரிச் நகர பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் சிறுவர் மருத்துவமனைக்கு பயிற்சிக்காக கிரமமாக வருகை தருவர். பிள்ளைகளை எப்படி பரிசோதிப்பது, நோய்களை எப்படி உறுதிப்படுத்துவது என்பன பற்றி அனுபவமுள்ள மருத்துவர்களிடம் கற்றுக்கொள்வார்கள். இவர்கள் உங்கள் குழந்தைகளை பரிசோதிப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் எமது சிறுவர் மருத்துவமனையானது மிகவும் மகிழ்ச்சி அடையும்.

பல்வேறு தாதியர் பயிற்சிகளும் இங்கே புகட்டப்படுகிறது. பல்வேறு பட்ட மாணவர்களும் கற்கையாளர்களும் ஒரு குழுவாக இங்கே பணிபுரிகிறா-ர்கள். கல்வித் தகுதிக்குத் தகுந்தபடி நாளாந்தப் பணியிலே இவர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். தகுதிகொண்ட பயிற்சியாளர்கள் மூலம் இவர்கள் நெறிப்படுத்தப் படுகிறார்கள்.

## ஆய்வுகள்

அறிவியல் ஆய்வுகள் பற்றிய முன்னெடுப்புகளுக்கு சிறுவர் மருத்துவமனையானது பல்கலைக்கழக மருத்துவமனைக்கு கடப்பாடுடையதாய் இருக்கிறது. சிறுவர் மருத்துவமனைக்கு இவ் ஆய்வுகள் மிகவும் அவசியமானவை. சோதனைகளுக்கும், சிகிச்சைகளுக்கும், மற்றும் பராமரிப்பு மேம்பாட்டிற்கும் இவை உதவுவ-தாய் இருக்கும். இதன்மூலம் குழந்தைகள், சிறுவர்களினது வாழ்க்கைத்தரம் மேலும் உயரும்.
சிறுவர் மருத்துவமனையானது அனைத்துலக தரத்தில் அங்கீகரிக்கப்பட்டு இயங்குகிறது.
பலசமயங்களில் நோயாளர்களுடன் அறிவியல் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகை ஆய்வுகளுக்கு - கன்ரோனாலன் ஆய்வுக்குழுவின் - அனுமதி அவசியமாகிறது. இதற்கு பெற்றோரினதும் ∴ குழந்தைகள், இளையோர் நீதிமன்ற ஒப்புதலும் தேவையாக இருக்கும்.

ஆய்வுக்கான நோயாளர்விபர பாவனை குறித்த மேலதிக விபரங்களுக்கு vimeo.com/253940341 என்ற பக்கத்தில் உள்ள வீடியோவை அழுத்திப் பார்க்கவும்.

# பெற்றோருக்கு ஆலோசனை வழங்குகிறோம்.

## நோயாளர் ஆலோசனை

ஏதாவது பிரச்சினைகள் அல்லது முறைப்பாடுகள் உள்ளதா? அதனை நீங்கள் எமக்கு தெரிவிப்பது மிக முக்கியம். நாம் ஒண்றிணைந்து அதற்கான தீர்வை காணலாம். நீங்கள் புதிய திட்டங்களை அல்லது நேர்மறையான கருத்துகளை தந்தாலும் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். உங்கள் பிள்ளைகளின் பராமரிப்புகள் மேம்படுவதற்கு உங்கள் கருத்துகளும், முறைப்பாடுகளும் பெரிதும் உதவும்.
தயவுசெய்து தாதியர்குழு, தலைமைத்தாதியர், மருத்துவர், அல்லது நோயாளரின் ஆலோசகர் போன்றவர்களிடம் உங்கள் கருத்துகளைத் தெரிவியுங்கள்.
நோயாளரின் ஆலோசகரை தொடர்பு கொள்ள:-

- 0041 44 266 81 35 என்ற தொலைபேசி இலக்கம்
- www.kispi.uzh.ch/feedback என்ற இணையத்தளம்
- «Ihre Meinung ist uns wichtig» என்ற குறிப்பேட்டிலுள்ள தபால் விலாசம்
- patientenberatung@kispi.uzh.ch என்ற மின் அஞ்சல்

## உளவியல் பாதுகாப்பு

உங்கள் பிள்ளையின் நோயின் தன்மையைப் பொறுத்து குழந்தை மற்றும் இளையோர் உளவியல் நிபுணர்களின் ஆலோசனைகள் உங்கள் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும். அவர்கள் இத்துறையில் மிகவும் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். மருத்துவரும் பெற்றோரான நீங்களும் இவ் உதவியைக் கோரலாம். பெற்றோரான நீங்கள் விரும்பினால் வெளிவாரியான உளவியல் நிபுணரின் ஆலோசனையையும் பெறலாம

## சமூகவியல் ஆலோசனைகள்

காப்புறுதி, பணக்கஷ்டம் போன்ற பிரச்சினைகள் உங்களுக்கு உண்டா? உங்கள் வேலைப்பளு காரணமாக வந்துபார்க்க முடியாமல் இருக்கிறதா? எமது சமூகநல ஆலோசகரை நாடுங்கள். உங்கள் தொழில் வழங்குனருடனோ, நிறுவனத்துடனோ, அல்லது வேறு முக்கியமானவர்களுடனோ கதைத்து உதவிகளை செய்வார். இவ்விடயத்தில் உங்களுக்கு உதவுவதற்காக அவரிடம் வேறுபல தொடர்புகள் உண்டு.

## பெற்றோரின் சுமைக் குறைப்பு

உங்கள் பிள்ளை மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டுமா? அதற்காக பிள்ளையை பார்க்கவர நேரமில்லாமல் இருக்குமா? «Aladdin-Stiftung» என்ற நிறுவனம் ஊடாக உங்கள் பிள்ளையை கூட இருந்து பார்ப்பதற்கும் விளையாடுவதற்கும் தொண்டர் உதவியாளர்கள் பலர் இருக்கிறார்கள்.

இவ் உதவி உங்களுக்கு தேவையெனின் தாதியர் குழுவிடமோ அல்லது www.kispi.uzh.ch/elternentlastung என்ற இணையத்தளம் ஊடாகவோ தொடர்பு கொள்ளுங்கள்.

## ஆன்மீக ஆலோசனை

நீங்கள் விரும்பும் பட்சத்தில் ஆன்மீக ஆலோசகர்கள் உங்கள் அறைக்கு வந்து உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்.

# பெற்றோருக்கான சேவை

## நோயாளர் நிர்வாகம் (பிரதான வாயில்)

இங்கே உங்கள் வரவையும் தங்குதலையும் பதிவு செய்யுங்கள்

## உள்வாங்கல் (பிரதான வாயில்)

இங்கே பல செய்திகளைப் பெறுவீர்கள்

- அறை இலக்கம்
- குழந்தை பராமரிப்பு
- வாகனத் தரிப்பிடம்
- சிற்றுண்டிச்சாலையில் பெற்றோர் மலிவுவிலையில் உணவுபெறும் அட்டை

## மேலதிக சலுகைகள் (பிரதான வாயில்)

- பணம் எடுக்கும் தான் இயங்கி
- சிற்றுண்டி, உணவுகள் தான் இயங்கி
- குழந்தை பராமரிப்பு அலுவலகம்
- வழிபாட்டு அறை
- இணையதளத்துடனான கணினி- (WLAN: Passwort KISPIGAST1)

## குழந்தை பராமரிப்பு அலுவலகம் (பிரதான வாயில் உள்ளது)

- திங்கள் - வெள்ளி வரை 13.00 மணி முதல் 16.30 மணி வரை
- குழந்தை பராமரிப்பு இலவசம். பெண் தொண்டர்கள் பணி செய்வார்கள்-
- குழந்தை பராமரிப்பானது பார்வையாளர்களுடன் வருகின்ற 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டும்
- இதற்கான முன்பதிவு அவசியமில்லை.



## ஊடகங்கள்(தொலைபேசி, படம.்.திரைப்படம், இணையத்தளம்,தொலைகாட்சி

- தாதியர் அறையில் கைத்தொலைபேசியைப் பாவிக்கலாமா என கேட்கவும். சிலவேளைகளில் இதற்குத் தடை உண்டு. காரணம் இவை சில மருத்துவ இயந்திரங்களை துண்டிக்கின்றன. விதிவிலக்காக அதை விமானத்தின் சின்னத்தில் வைத்தும் மருத்துவமனை இணையத்தளத்திலும் பார்க்கலாம்.
- ஒவ்வொரு நோயாளியின் படுக்கைக்குப் பக்கத்தில் ஓர் தொலை பேசி தனிப்பட்ட இலக்கத்துடன் உள்ளது. தொலை பேசிக்கான மட்டையை நீங்கள் நோயாளிகள் நிர்வாகத்தில் வாங்கலாம்
- பின்வரும் நிலையங்களில் உள்ள படுக்கைக்குப் பக்கத்தில் தொலைபேசி கிடையாது. தீவிரசிகிச்சை நிலையம், பிறந்தகுழந்தைகள் பகுதி, பால்குடிப்பிள்ளைகள் பகுதி
- பிரதான வாயில்: இங்கு ஓர் கணனி இணையத்தளத் தொடர்புடன் பூட்டப்பட்டுள்ளது.
- நோயாளிகளும் பெற்றோரும் மருத்துவமனை பூராக றுடயுே பாவிக்கலாம். ஆதற்கானதிறப்பு: முஜளுீஜபுயுளுவு1
- தொலைக்காட்சி: தயவுசெய்து பராமரிப்புக் குழுவுடன் தொடர்பு கொள்ளுங்கள் மற்றய நோயாளிகளுக்கு இடஞ்சல் கொடுக்காதீர்கள்.
- படங்கள் மற்றும் திரைப்படம்: நீங்கள் உங்களையும் உங்கள் பிள்ளையை மட்டும் படம் எடுக்கலாம் அதை பிரபலப்படுத்தலாம்.
- சொந்தத்தில் கொண்டுவரப்படும் பிள்ளைத் தொலைபேசியோ அல்லது அது போன்ற கருவிகளோ பாவிக்க முடியாது.

## பார்வையாளர்க்கான உணவும் குடிவகைகளும்

இவர்கள் சிற்றுண்டிச்சாலையில் சாப்பிடலாம். உள்வாங்கல் நிலையத்தில் பெற்றோர் அட்டையை எடுக்கவும். இதன் மூலம் குறைந்த விலைய-ில் வேண்டிப் பயன் அடைவீர்கள். பிரதான நுழைவாயில் உணவும் குடிவகை-கயையும் கொண்ட தான் இயங்கி இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது.

## வாகனத்தரிப்பு நிலையங்கள்

நீங்கள் பொதுப்போக்குவரத்துச் சேவையின் வாகனங்களில் பயணம் செய்து (டிறாம், பேருந்து) மருத்துவமனைக்கு வருவது புத்திசாலித் தனமானது. மிக-வும் குறைந்த வாகனத்தரிப்பு நிலையங்கள் உள்ளன. வாகனத்தரிப்பு இடங்கள் எங்கே உள்ளது என்பதை வரைபடத்தில் பார்க்கலாம். மூன்று மணித்தியாலத்துக்கு மேல் அங்கு தரித்து நிற்பீர்களானால் உங்களுக்கு ஓர் சிறிய தள்ளுபடி தரப்படும். பிரதான வாயில் உள்ள வரவேற்பு நிலயத்தில் கேட்கவும்.

## «அமைதியான அறை »

சிந்தித்துப் பார்ப்பதற்காக உங்களுக்கு ஓர் அமைதியான இடம் வேண்டுமா? நீங்கள˙«Raum der Stille எனும் அமைதியான அறை» யைப் பாவிக்கலாம். இது பிரதான வாயில் வரவேற்புக்கு நேர முன்னால் உள்ளது.

## «My Light» (எனக்கு வெளிச்சம்)

«My Light» என்ற கலைவண்ணமாகப் பூட்டப்பட்ட வெளிச்சத்தை யேம்ஸ் ருறெல் என்பவர் தயாரித்தார். இது அறையினுள் நடந்து சென்று பார்க்கக் கூடிய நீள்வட்ட ஒளியாகும் இந்த அறை, ஆய்வகம் 2 க்கும் மேல்வீடு 1 க்கும் இடையில் உள்ளது. இது ஒவ்வொரு நாளும் 9ல் இருந்து 21 மணி வரை திறந்திருக்கும். இதன் திறப்பு மருத்துவமனையின் பிரதான வாயில் உள்ள வரவேற்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## «Kiwanis-Lounge» கிவானிஸ்-லவுஞ்ச் என்ற அமைப்பு

பெற்றோர் செயற்பாட்டு நிலையத்திலும் அமைதிக்க்காக ஒதுங்கிக் கொள்ள ஓர் இடமுண்டு. இது 1.வது மாடியில் சிற்றூண்டிச்சாலையின் வாசலில் அமைந்தள்ளது.

## புகைப்பதற்குத்தடை

இவ்வீட்டின் முழு இடத்திலும் மற்றும் சுற்றியுள்ள வழவுக்குள்ளும் புகைப்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. புகைபிடித்தலுக்காக ஓர் புறம்பான இடமுண்டு. அது ஓர் வழிகாட்டியால் காட்டப்பட்டுள்ளது. மெழுகுதிரி நெருப்பும் மற்றய மூடப்படாத நெருப்பும் இங்கு எல்லா இடங்களிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

# www.kispi.uzh.ch/broschueren

Broschüren in verschiedenen Sprachen sind auf der Webseite vom Kinderspital Zürich abrufbar.

You can find brochures in various languages on the Zurich Children's Hospital website.

Vous pouvez consulter des brochures en différentes langues sur le site Internet de l'Hôpital pédiatrique de Zurich.

Opuscoli in diverse lingue sono scaricabili dal sito internet dell'ospedale pediatrico Zurigo.

Broshurat në gjuhë të ndryshme mund të thirren në web faqen e spitalit për fëmijë Zürich.

على صفحة الإنترنت الخاصة بمستشفى الأطفال في زيورخ يُمكنك تحميل الكتيبات بلغات متعددة.

Brošure na različitim jezicima možete pronaći na internetskoj stranici Dječje bolnice Zürich.

Estão disponíveis brochuras em diferentes idiomas na página web do Kinderspital Zürich.

Брошюры на разных языках можно загрузить на сайте детской клиники Цюриха.

Brošure na raznim jezicima mogu se pogledati na internet stranici dečje bolnice u Cirihu.

Puede encontrar folletos en diferentes idiomas en la página web del Kinderspital Zürich.

கைநூல் ஒன்று பலதரப்பட்ட பாசைகளில் சூறிச் மருத்துவமனையின் இணையத்தளத்தில் காணலாம்..

ኣብቲ ወብሳይት ሆስፒታል ቆልዑ ዙሪክ ብዝተፈላለየ ቋንቋ ተተርጒመ ጽሑፍ ይርከብ።

Çeșitli dillerde broșürler Zürih çocuk kliniğinin web sayfasından edinilebilir.




Hauptbahnhof: → **Tram 3** Richtung Klusplatz bis Haltestelle Hottingerplatz*
→ **Tram 6** Richtung Zoo bis Haltestelle Platte*
Stadelhofen: → **Tram 8** Richtung Klusplatz bis Haltestelle Römerhof*

*இந்தத்தரிப்பு நிலையத்திலிருந்து 10 நிமிடநடையில் மருத்துவமனையை அடையலாம

---

UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

*Das Spital der Eleonorenstiftung*

Kinderspital Zürich - Eleonorenstiftung
Steinwiesstrasse 75
CH-8032 Zürich

Telefon +41 44 266 71 11
www.kispi.uzh.ch